(6 pages) **Reg. No. : ....................................**

**Code No. : 30159** **Sub. Code : JMTA 21/ SMTA 21**

B.A. (CBCS) DEGREE EXAMINATION, APRIL 2019.

Second Semester

Tamil — Main

சிற்றிலக்கியம்/சிற்றிலக்கியங்கள்

(For those who joined in July 2016 onwards)

Time : Three hours Maximum : 75 marks

பகுதி அ — (10 × 1 = 10 மதிப்பெண்கள்)

அனைத்து வினாக்களுக்கும் சரியான விடை தருக.

1. மூர்த்தி, தலம், தீர்த்தம் என்ற முப்பெருமைகளைக் கொண்ட நகரம்

(அ) திருச்சி (ஆ) மதுரை

(இ) கோவை (ஈ) திருவாரூர்

2. அறிவால் உண்ணப்படும் தேன் போன்றது

(அ) வண்ணம் (ஆ) சுவை

(இ) தமிழ் (ஈ) வனப்பு

3. அபிராமி அந்தாதி எழுதியவர் யார்?

(அ) ஒட்டக்கூத்தர்

(ஆ) பட்டர்

(இ) நக்கீரர்

(ஈ) வைத்தியநாத தேசிகர்

4. அம்மானைப் பருவம் இடம் பெறும் பிரபந்தம்

(அ) பிள்ளைத்தமிழ்

(ஆ) திருக்குற்றாலக் குறவஞ்சி

(இ) முக்கூடற்பள்ளு

(ஈ) பெத்தலகேம் குறவஞ்சி

5. பரணியின் யாப்பு வகை

(அ) கலித்தாழிசை (ஆ) கலிவெண்பா

(இ) வெண்பா (ஈ) ஆசிரியப்பா

6. உலாவில் இடம்பெறும் தலைவியின் ஏழு பருவங்களில் பாடுவதற்கு அரிய பருவம்

(அ) பேதை (ஆ) பெதும்மை

(இ) மங்கை (ஈ) மடந்தை



Nesamony Memorial Christian College, Marthandam

7. பள்ளு இலக்கியத்தில் முதல் நூல்

(அ) சீர்காழிப் பள்ளு

(ஆ) முக்கூடற்பள்ளு

(இ) திருமலைப் பள்ளு

(ஈ) தஞ்சைப் பள்ளு

8. திருக்குற்றாலக் குறவஞ்சி எழுதியவர்

(அ) சுப்பரதீபக்கவிராயர்

(ஆ) திரிகூடராசப்பக் கவிராயர்

(இ) உமறுப்புலவர்

(ஈ) சேக்கிழார்

9. மாக்கோதை என்பவன்

(அ) சேரன் (ஆ) சோழன்

(இ) பாண்டியன் (ஈ) பல்லவன்

10. பல்வகை யாப்பில் பாடப்படும் சிற்றிலக்கியம்

(அ) குறவஞ்சி (ஆ) பள்ளு

(இ) கலம்பகம் (ஈ) தூது



பகுதி ஆ — (5 × 5 = 25 மதிப்பெண்கள்)

அனைத்து வினாக்களுக்கும் 250 சொற்களில் விடை தருக.
வினா (அ) அல்லது (ஆ) தேர்ந்தெடு.

11. (அ) தூது எனப்படுவது யாது? தூது இலக்கியத்தின் இலக்கணத்தையும் அமைப்பையும் விளக்குக.

(அல்லது)

(ஆ) தமிழ் விடு தூது திருத்தலங்களின் பெருமைகளை எவ்விதம் குறிப்பிடுகிறது?

12. (அ) அந்தாதி – சிறு குறிப்புத் தருக.

(அல்லது)

(ஆ) பிள்ளைத் தமிழ் இலக்கணத்தைக் கூறுக.

13. (அ) பரணி இலக்கியங்கள் சிலவற்றை குறிப்பிடுக.

(அல்லது)

(ஆ) விக்கிர சோழனின் போர்ச்சிறப்புக்கள் யாவை?

14. (அ) முக்கூடற் பள்ளின் சிறப்பினை எடுத்துக்காட்டுக.

(அல்லது)

(ஆ) குறத்தி கூறும் நாட்டுவளத்தை எடுத்துரைக்க.



Nesamony Memorial Christian College, Marthandam

15. (அ) சேரனுக்கு சீற்றம் விளைவித்தோர் நாட்டின் இயல்பை விவரி.

(அல்லது)

(ஆ) கலம்பகம் – பெயர் விளக்கம் தருக.

பகுதி இ — (5 × 8 = 40 மதிப்பெண்கள்)

அனைத்து வினாக்களுக்கும் 600 சொற்களில் விடை தருக.
வினா (அ) அல்லது (ஆ) தேர்ந்தெடு.

16. (அ) பல்வேறு நதிகளின் சிறப்புகளாகத் தமிழ் விடு தூது குறிப்பிடும் செய்தி யாது?

(அல்லது)

(ஆ) தமிழ் விடு தூது நூலின் கண் காணலாகும் பெரியபுராணச் செய்திகளைத் தொகுத்திடுக.

17. (அ) அபிராமி பட்டர் இறைவியிடம் வேண்டுவதை விவரி.

(அல்லது)

(ஆ) குமரகுருபரர் தமிழின் சிறப்பை முருகப் பெருமானோடு ஒப்பிடும் பாங்கை விவரிக்க.

18. (அ) திருமந்திர ஓலையின் மறுமொழி கேட்டு குலோத்துங்கன் செய்தது என்ன?

(அல்லது)

(ஆ) குற்றாலக் குறவஞ்சியின் மலைவளம் பற்றி விவரி.



19. (அ) சேரமன்னன் தன் பகைவர்களை வென்றழித்த களத்தின் சிறப்பினை விவரி.

(அல்லது)

(ஆ) திரிகூடராசப்பக் கவிராயர் திருக்குற்றாலக் குறவஞ்சியில் காணப்பெறும் கவிதை நயங்கள் குறித்து கட்டுரைக்க.

20. (அ) சேரனின் வீரச் சிறப்பை விவரி.

(அல்லது)

(ஆ) நந்திவர்மனின் வீரச் சிறப்பினை புலப்படுத்துக.

---



Nesamony Memorial Christian College, Marthandam